விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 27 வியாழன் 10.06.2021 மலர் - 2, இதழ் - 65

# இளம் எழுத்தாளர்களுக்கு மோடி அழைப்பு



பிரதமர் மோடி, 'தனது டுவிட்டர் பதிவில், 'மாணவர்களின் சிந்தனைத் திறன், கற்பனைத் திறன்களை ஊக்குவித்தல், மாணவர்களிடம் தலைமைப் பண்பை உருவாக்குதல் ஆகியவற்றை லட்சியமாகக் கொண்டு புதிய தேசிய கல்வி கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. நாம் அடுத்த ஆண்டு, 75வது சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளோம். இதையொட்டி, 'யுவ' என்ற பெயரில், தேசிய அளவிலான திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தில் 30 வயதுக்கு உட்பட்ட இளம் எழுத்தாளர்கள் அடங்கிய குழு உருவாக்கப்படும். சர்வதேச அளவில் பாரதத்தை முன்னிலைப்படுத்தும் வகையில் சிறப்பாக எழுதும் இளம் எழுத்தாளர்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள், பாரதப் பாரம்பரியம், கலாச்சாரம், சிந்தனை, இலக்கியம் ஆகியவற்றை சர்வதேச அளவில் பிரபலப்படுத்தும் வகையில் எழுத வேண்டும். மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும், தேசிய புத்தக அறக்கட்டளை இந்த திட்டத்தை செயல்படுத்தும். mygov.in இணையதளம் வழியாக நடத்தப்படும் இந்த போட்டியின் முடிவில், 75 சிறந்த இளம் எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்' என இளம் எழுத்தாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

# பேரிடர் தகவல் தெரிவிக்க வசதி

பேரிடர் காலங்களில், பொது மக்கள் தங்கள் பகுதிகளில் ஏற்படும் ஆபத்துகள் குறித்த தகவல்களை தெரிவிக்க, விபத்துகளைத் தடுக்க, படம் எடுத்து அனுப்பும் வகையில், 24 மணி நேரமும் இயங்கும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் பேரிடர் முன்னெச்சரிக்கை மேலாண்மைக்கென, 94458 69848 என்ற வாட்ஸ் ஆப் எண், https://tnsdma.tn.gov.in என்ற இணையதளம், TNSMART செயலி, 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் தகவல் பதிவு வசதி, புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



# கிராம கோயில் பூசாரிகள் கோரிக்கை

'ஹிந்து அறநிலைய துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அமையாத, ஆயிரக்கணக்கான கிராமக் கோயில் பூசாரிகளின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு கோயில்களில் சம்பளம் இல்லா பணியாளர்களுக்கு வழங்குவதை போல, 4,000 ரூபாய், அரிசி, மளிகை பொருட்கள் தொகுப்பு வழங்க வேண்டும். தற்போதுள்ள ஊரடங்கு, கோயில்களில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதி மறுப்பு உள்ளிட்ட காரணங்களால் அவர்கள் குடும்பம் நடத்தவே போராடி வருகின்றனர்' என, கிராமக் கோவில் பூசாரிகள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஆலய வழிபடுவோர் சங்கம் அரசுக்கு கோரிக்கை



ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் டி.ஆர்.ரமேஷ், 'வடபழநி ஆண்டவர் கோவிலுக்குச் சொந்தமான 5.52 ஏக்கர் நிலத்தை அறநிலையத்துறை மீட்டது, கோயில் நிலங்கள் மீட்கப்படும் என அமைச்சர் கூறியதும் அதேசமயம், அறநிலையத்துறைக்கு சில விஷயங்களை கவனத்திற்கு கொண்டு வருகிறோம். கோயில் நிதி, விழாக்கள், பூஜைகள் போன்றவை அரசின் அதிகாரத்தின் கீழ் வராது. கோயில் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, ஆகம முறைப்படி, அறங்காவலர்கள் அதிகாரத்தின் கீழ் வரும். கோயில் நிலங்களில் என்ன செய்ய வேண்டும் என்பது, அறங்காவலர் அதிகாரத்தின் கீழ் வரும். இதில், அரசு ஒரு பொதுவான வழிகாட்டுதலை தரமுடியும். கோயில் ஆக்கிரமிப்பு குறித்து அறங்காவலர் முறையிட்டால், அவற்றை நீக்க வேண்டியது இணை கமிஷனரின் கடமை. அதற்கு, சட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக தக்கார் முறையிட்டும் செய்ய வில்லை; தற்போது செய்திருக்கிறார்கள். கடந்த 15 ஆண்டுகளாக மீட்கப்பட்ட கோயில் நிலங்களுக்கான பழைய வாடகை பாக்கியை வசூலிக்க அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், கோயில்களுக்கு நஷ்டம். சட்டப்பிரிவு, '79 சியின்படி, ஜப்தி நடவடிக்கை மூலம் வாடகை, குத்தகையை வட்டியுடன் வசூலிக்க வேண்டும். செய்யத் தவறும் அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீட்கப்பட்ட மதிப்புமிக்க இடங்களுக்கு, அந்த இடத்தின் தன்மைக்கேற்ப வங்கி உத்தரவாதத்துடன் ஹிந்து அமைப்புகளுக்கு வாடகை அல்லது குத்தகை விட்டு அங்கே அங்கே ஹிந்து பள்ளிகள், தொழிற்கல்வி நிலையங்கள் , ஹிந்து மருத்துவமனைகளை நடத்த வழிவகை செய்யலாம். கோயிலின் பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள், பல நூறு கோடி ரூபாய் வாடகை பாக்கி வரவேண்டி உள்ளது. அதனையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சமீபத்திய சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பு, அரசு கோயில் நிலங்களை மீட்க உறுதுணையாக உள்ளது. அதனைப் பின்பற்றி, அரசு செயலாற்றினாலே போதும்; கோயில்கள் மீண்டும் செழிக்கும். இதனால், ஒரு இலட்சம் ஹிந்துக்களுக்கு நல்ல சம்பளத்துடன் தமிழகம் எங்கும் வேலை வழங்கலாம். இதனால் அரசுக்கு நற்பெயர் கிட்டும்' என தெரிவித்துள்ளார்.

# இ - சேவை மையங்கள் திறப்பு

கொரோனா பரவல் காரணமாக, அரசு இ சேவை மையங்கள், தற்காலிகமாக மூடப்பட்டன. 30 சதவீத ஊழியர்களுடன், அரசு அலுவல கங்கள் செயல்பட அரசு உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து, அனைத்து அரசு இ சேவை மையங்களையும் உடனடியாகத் திறந்து, மக்களுக்கு சேவைகள் வழங்க சுற்றறிக்கை அனுப்பப்பட்டு உள்ளது. எனினும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் அனுமதியை பெற்று அதன் பிறகு செயல்பட அறுவுறுத்தப்பட்டு உள்ளது. தாலுகா, மண்டல அலுவலகங்களில், இரண்டு சேவை கவுன்டர்கள் இருந்தால், அதில் ஒன்று மட்டுமே முழு நேரம் செயல்படவும் ஒரு கவுன்டர் மட்டும் உள்ள பிற சேவை மையங்கள், பிற்பகல் வரை செயல்படவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.





# அரசு விலை நிர்ணயம்

தமிழக அரசு மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை மூலமாக 15 பொருட்கள் தமிழ்நாடு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அதற்கான சில்லறை விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, N.95 முகக்கவசம் ஒன்று ரூ. 22.00. கிருமிநாசினி 200 மி.லி. ரூ. 110.00. கையுறை பரிசோதிப்பது 1 செட் ரூ. 5.75. கையுறை (ஸ்டெரைல்) 1 செட் ரூ. 15.00. முகக்கவசம் (2 அடுக்கு) ரூ. 3.00. முகக்கவசம் (3 அடுக்கு) ரூ. 4.00. அறுவை சிகிச்சை முகக்கவசம் (பேப்ரிக் கோட்) ரூ. 4.50. ஒருமுறை பயன்படுத்தும் உடல் கவசம் ரூ. 12.00. அறுவை சிகிச்சை கவுன் ரூ. 65.00. மறு உருவாக்க முகக்கவசம் ரூ. 80.00. ஆக்சிஜன் முகக்கவசம் ரூ. 54.00. பல்ஸ் ஆக்சி மீட்டர் ரூ. 1500.00. ஃப்லோ மீட்டர் ரூ. 1520.00. முகத்தை மூடும் ஷீல்டு கவசம் ரூ. 21.00. பிபிஇ கிட் ரூ. 273.00. என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



# கோயில் நில ஆவணங்கள் இணையத்தில் வெளியீடு

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 36 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களின் நில உரிமை ஆவணங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இக்கோயில்களுக்கு சொந்தமாக 4 லட்சத்து 78 ஆயிரத்து 272 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றின் உரிமை ஆவணங்களை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. மொத்தம் உள்ள கோவில் நிலங்களில் 72 சதவீதம், அதாவது மொத்தமுள்ள 4.78 லட்சம் ஏக்கர் நிலங்களில் முதல் கட்டமாக 3.43 லட்சம் ஏக்கர் நில விவரம் வெளியிடப்பட்டுள்ளது. www.hrce.tn.gov.in என்ற இணையதளத்தில், பொதுமக்கள் 'திருக்கோயில் நிலங்கள்' பகுதியில் பட்டியலிட்டுள்ள கோயிலை தேர்வு செய்து அதன் விவரங்களை பார்வையிடலாம்.



# மணல் மா:.பியாவுடன் பேரம்

தி.மு.க ஆட்சிக்கு வந்தால் ஆறுகளில் சுதந்திரமாக மணல் அள்ளலாம். மீறி அதனை தடுக்கும் அதிகாரிகளை இல்லாமல் செய்வேன் என்ற அறிவிப்பை வெளிப்படையாக சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் போதே வெளியிட்டார் தற்போதைய மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி. கடந்த ஆட்சி காலத்தில், மணல் மஃபியா, கருப்புப் பணம் என பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிய சேகர் ரெட்டி, முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 கோடியை முதலமைச்சர் ஸ்டாலினை நேரில் சந்தித்து வழங்கினார்.

சமீபத்தில், வடமண்டல மணல் மாஃபியா என்று அழைக்கப்படும் கரிகாலனுடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனும் அவரது மகனும் நெருங்கி இருக்கும் புகைப்படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இவர் சேகர் ரெட்டி, ராமச்சந்திரன், திண்டுக்கல் ரெத்தினம், ஆகியோரின் துணையுடன் செயல்பட்டு வருபவர் என சொல்லப்படுகிறது. இந்நிலையில், தமிழகத்தில் சட்டவிரோத மணல் கடத்தலுக்கு அனுமதியளிப்பதற்காக ரூ. 300 கோடி பணம் கைமாறியது தொடர்பான ஆடியோ வெளியாகியுள்ளது. அந்த பணத்தை அமைச்சரின் உதவியாளர் பெற்றுக் கொண்டு, இதில் இடைத்தரகராக செயல்பட்டவருக்கு கமிஷன் தராததால், அந்த இடைத்தரகர் அமைச்சரின் உதவியாளருக்கு போனை போட்டு பேசிய உரையாடல் ஆடியோ ஒன்று வெளியாகி திமுகவினருக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக தி.மு.க ஆட்சியில் இல்லாத நிலையில், தற்போது முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஸ்டாலின், தனது ஆட்சியின் மீது யாரும் குறை சொல்லக்கூடாது என கவனமாக செயல்படுகிறார். ஆனால், அமைச்சர்களோ, இதுபோன்று சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது முதல்வருக்கும் அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் செயலாக இருக்கிறது. எனவே, இவ்விவகாரத்தில் முதலமைச்சர் தனி கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.



# ஜிதின் பிரசாதா பா.ஜ.க. வில் இணைந்தார்

உத்தரபிரதேச மாநில சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற இருக்கிறது. அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையில் மீண்டும் தேர்தலை சந்திக்க இருப்பதாக அம்மாநில பா.ஜ.க அறிவித்துள்ளது. எனவே, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றப் போவது உறுதி என பாஜகவினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்நிலையில், காங்கிரஸ் கட்சியின் இளம் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜிதின் பிரசாதா, டெல்லி பா.ஜ.க தலைமை அலுவலகத்தில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்தார். இது அம்மாநில அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் அதிர்ச்சியையும், பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சியில் மறுசீரமைப்பு தேவை என்பதை வலியுறுத்தி சோனியா காந்திக்கு, 23 தலைவர்கள் கடிதம் எழுதினார்கள் என்பதும் அதில் ஜிதின் பிரசாதாவும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## காவல் அதிகாரியை மிரட்டிய தி.மு.க. ஒன்றியம்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றிய தி.மு.க செயலாளர் ஞானசேகரன். இவரது கார் டிரைவர் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது வாகன தணிக்கையில் அவரிடம் இபாஸ் இல்லாததால் அவரது வாகனத்தை பறிமுதல் செய்தார் உத்திரமேரூர் காவல் ஆய்வாளர் வெங்கடேசன். உடனே, சம்பவ இடத்துக்கு வந்த ஞானசேகரன், உடனடியாக இருசக்கர வாகனத்தை விடுவிக்க வேண்டும் என்று காவல் ஆய்வாளரை மிரட்டியுள்ளார். அந்த வீடியோ பதிவு தற்போது வேகமாகப் பரவி வருகிறது. காவல்துறையினரின் செயல்பாடுகளில் எக்காரணம் கொண்டும் தலையிடக்கூடாது. தேவையில்லாத பிரச்சனைகளை தவிர்க்க வேண்டும் என்று தி.மு.கவினருக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியும், அதனை கொஞ்சமும் மதிக்காமல் செயல்படுகின்றனர் தி.மு. கவினர். முதல்வர் இது போன்றவர்கள் மீது வலுவான நடவடிக்கை எடுப்பாரா?



## ஸ்ரீராமர் கோயில் கட்டுமானம்



'ஸ்ரீராமர் கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, அஸ்திவாரம் அமைக்கும் பணி இரவு பகலாக தொடர்ந்து நடக்கிறது. பூமிக்கு 50 அடி ஆழத்தில், 400 மீட்டர் நீளம், 300 மீட்டர் அகலம் உடையதாக பிரமாண்ட கோயிலின் அஸ்திவாரம் அமைகிறது. இந்தப் பணி, வரும் அக்டோபருக்குள் முடியும். அதன்பின், கோயிலுக்கான கற்தூண்கள் உள்ளிட்ட இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள், டிசம்பரில் துவங்கும். இதற்கான கற்கள் வரவழைக்கப்பட்டுள்ளன' என அதன் அறங்காவலர் அனில் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

## தமிழ் தாத்தா பெயர் வைக்க கோரிக்கை

பா.ஜ.கவை சேர்ந்த வழக்கறிஞர் அஸ்வத்தமான், 'ரிப்பன் பில்டிங் என்று ஆங்கிலப் பெயரை வைத்துக் கொண்டு 'தமிழ் வாழ்க' என பலகை மட்டும் வைப்பதால் தமிழ் வளர்ந்து விடாது. தமிழ் இலக்கியங்களை பாதுகாத்து அச்சில் ஏற்றி பெரும் தொண்டாற்றிய தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் நினைவைப் போற்றி 'உவே. சா.மாளிகை' என அதற்கு பெயரிட வேண்டும்' என தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# கோயில் நிலம் நீதிமன்றம் உத்தரவு



சேலத்தைச் சேர்ந்த ராதா கிருஷ்ணன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதில், 'தமிழக அரசு, 198586, 198687ஆம் ஆண்டுகளில் வெளியிட்ட கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், தமிழகத்தில் உள்ள கோயில்களுக்குச் சொந்தமாக 5 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், 201819, 201920ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், 4 லட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதில் மீதமுள்ள 47 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கண்டுபிடிக்க உத்தரவிட வேண்டும். மேலும், கோவை தண்டபாணி ஆண்டவர் கோயில், கரிவரதராஜ பெருமாள் கோயில் உள்ளிட்ட கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். கோயில் நில வருமானத்தில் 50 சதவீதத்தைக் கோயில்களுக்காகப் பயன்படுத்த உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார். இந்த வழக்கை இன்று விசாரித்த நீதிபதிகள் அமர்வு, குறிப்பிட்ட அந்த இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ள நிலங்களின் விவரங்களை அறிக்கையாகத் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர். மேலும், கோவை கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பத்திரப்பதிவு செய்ய தடை இல்லை எனக் கடிதம் அனுப்பிய சூலூர் சார் பதிவாளர், அதற்கு தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டு விசாரணையை ஜூலை 5ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# வனப்பகுதி ஆக்கிரமிப்பு நீதிமன்றம் உத்தரவு



நீலகிரி, நடுவட்டம் கிராமத்தில் மருத்துவர் கவிதா செண்பகம் என்பவர் கட்டும் ரிசார்ட்டுக்கு எதிரான நடவடிக்கைக் கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், நீலகிரி மாவட்ட ஆட்சியர், வனத்துறை அதிகாரி உள்ளிட்டோர், இது குறித்து ஆய்வு செய்து ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீட்க வேண்டும். அவர்கள் வனத்தில் இருந்து ரிசார்ட்டுக்கு தண்ணீர் எடுப்பதை தடுக்க வேண்டும் என உத்தரவிட்டது. மேலும், தமிழகத்தில், ஒரு அங்குல வனப்பகுதி நிலத்தைக்கூட ஆக்கிரமிக்க யாரையும் அனுமதிக்கக்கூடாது என தெரிவித்துள்ளது.

# நடிகையின் தேசவிரோத கருத்து



சமீப காலமாக, லட்சத்தீவில் முஸ்லிம் அடிப்படைவாதிகள் தேச விரோத உணர்வுகளைத் தூண்ட முயற்சிக்கின்றனர். இந்த நேரத்தில், நடிகை ஆயிஷா சுல்தானா ஒரு முஸ்லிம் அமைப்பான ஜமாத்இஇஸ்லாமியுடன் தொடர்புடைய மலையாள செய்தி சேனலான மீடியா ஒன்னில், பேசுகையில், லட்சத்தீவுக்கு எதிராக கொரோனாவை உயிரியல் ஆயுதமாக பாரத அரசு பயன்படுத்துவதாக குற்றம் சாட்டினார். இந்த கலந்துரையாடலில் கலந்துக்கொண்ட பா.ஜ.க பிரதிநிதி, ஆயிஷா சுல்தானா உடனடியாக தனது தேச விரோத கருத்தை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தினார். ஆனால் அந்த நடிகை அதற்கு மறுப்புத் தெரிவித்தார். அவரது சர்ச்சைக்குரிய இந்த கருத்துக்கள் குறித்து பாலக்காடு, பதனம்திட்டா மற்றும் திருவனந்தபுரம் காவல் நிலையங்களில் பா.ஜ.கவினர் புகார்களை அளித்துள்ளனர்.

# முகநூல் குறைதீர் அதிகாரி




சமூக ஊடகங்கள், ஓ.டி.டி போன்றவற்றை முறைப்படுத்த, மத்திய அரசு புதிய தொழில்நுட்ப விதிகளைக் கொண்டுவந்துள்ளது. அதன்படி 50 லட்சத்துக்கும் மேல் பயனாளர்கள் உள்ள சமூக ஊடகங்கள் குறை தீர்ப்பு அதிகாரியை நியமிக்க வேண்டும்.இந்த அதிகாரிகள் பாரதத்தில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். இவர்களைப் பயனாளர்கள் தொடர்புகொள்ள தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்றவையும் வழங்க வேண்டும். பயனாளர்களின் புகார்களைப் பெற்றதற்கான ஒப்புகையை 24 மணி நேரத்துக்குள் இந்த அதிகாரிகள் கொடுக்க வேண்டும். மேலும் 15 நாட்களுக்குள் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன்படி முகநூல் நிறுவனத்தின் குறைதீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவரைப் பயனாளர்கள் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளலாம் என்றும் அதன் இணையதள பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல கூகுள், வாட்ஸ் அப் நிறுவனங்களும் குறைதீர்ப்பு அதிகாரிகளை நியமனம் செய்துள்ளன. அதன் விவரங்கள் அவற்றின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசியல்வாதிகள், பிரபலங்கள் ஆகியோரின் பதிவுகளும் சாதாரண மக்களின் பதிவுகளைப் போலவே கருதப்படும் என இந்நிறுவனங்கள் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிட்டத்தக்கது.




# உலக வங்கி கணிப்பு

உலக வங்கி, வெளியிட்டுள்ள கொரோனா தொற்றுநோயின் இரண்டாவது அலைக்குப் பிறகான உலகளாவிய பொருளாதார வாய்ப்பு குறித்த அறிக்கையில், பாரதப் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 8.3 சதவீதம் வளர்ச்சியடையும் என்று கூறியுள்ளது. இது கடந்த ஜனவரியில் அறிவித்ததைவிட 3 சதவீத அதிகம். மேலும், சீனாவுக்கு அடுத்ததாக உலகில் வேகமாக வளர்ந்து வரும் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக பாரதம் இருக்கும் என தெரிவித்துள்ள உலக வங்கி, பாரதத்தின் 202122க்கான ஜி.டி.பி வளர்ச்சி கணிப்பை 10.1 சதவீதத்திலிருந்து 8.3 சதவீதமாகக் குறைத்துள்ளது. கொரோனா இரண்டாவது அலையால் பாரதத்தின் பொருளாதார மீட்சி தடைபட்டுள்ளது. பாரதத்தின் இந்த வளர்ச்சி, உள்கட்டமைப்பு, கிராமப்புற மேம்பாடு மற்றும் சுகாதாரத்திற்கான அதிக செலவின திட்டங்களால் சாத்தியமாகும் என்றும் உலக வங்கி தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# சதுப்பு நில மரங்கள் நடவு திட்டம்

எதிர்காலத்தில் புயல்களின் தாக்கத்தைக் குறைக்க, வடக்கு 24 பர்கானாஸ், தெற்கு 24 பர்கானாஸ் மற்றும் கிழக்கு மிட்னாபூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் தங்களது மாநில அரசு 15 கோடி சதுப்பு நில மரங்களை நடவு செய்யும் என்று மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி தெரிவித்தார். கடந்த மே மாதத்தில் தாக்கிய புயல் காரணமாக 6 மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் அழிந்தன. கொல்கத்தாவில் மட்டும் 5,000 மரங்கள் வேரோடு சாய்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆக்ஸிஜன் தட்டுப்பாடு இறப்புகள் உண்மையா?



உத்தர பிரதேசம், ஆக்ராவில், 'பராஸ்' என்ற தனியார் மருத்துவ மனையில் உள்ள கொரோனா சிகிச்சை பிரிவுவில், கடந்த ஏப்ரலில், கடுமையான ஆக்சிஜன் தட்டுப்பாட்டால், நோயாளிகளை வேறு மருத்துவமனைகளுக்கு மாற்ற அவர்களின் உறவினர்களுக்கு கூறப்பட்டது. சிலர் சென்றனர். பலர் செல்லவில்லை. அதனால், ஆக்சிஜன் தீர்ந்தால் எத்தனை பேர் இறப்பார்கள் என்பதை அறிய, அக்ஸிஜன் சப்ளை நிறுத்த சோதனை ஓட்டம் நடைபெற்றது. இதனால்,அங்கிருந்த 96 கொரோனா நோயாளிகளில் 22 பேர் உயிரிழந்தனர் என்ற வீடியோ சமீபத்தில் வெளியானது. இதனை அந்த மருத்துவமனை உரிமையாளர் அரின்ஜய் ஜெயின் மறுத்துள்ளார். வீடியோ வெட்டி ஒட்டப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், அப்போது அங்கே, 55 நோயாளிகள் மட்டுமே இருந்தனர், மருத்துவமனைக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்படவில்லை, அன்று ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் எந்த நோயாளிகளும் இறக்கவில்லை, அம்மருத்துவமனையில் கொரோனாவால் இதுவரை நான்கு பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இந்நிலையில், 'அந்த வீடியோ உண்மையானது என உறுதிப்படுத்தப்பட்டால் பராஸ் மருத்துவமனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். வீடியோவில், அரின்ஜய் ஜெயின் 'மோடிநகர்' ஆலையில் ஆக்ஸிஜன் உற்பத்தி இல்லை என்று கூறியுள்ளார். இது உண்மை இல்லை. எனவே, அவர் மீது தொற்றுநோய் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து விசாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது' என அம்மாநில அரசு அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

# உலக பல்கலைக்கழக தரவரிசை

உலகளாவிய பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 1000 பல்கலைக்கழகங்கள் வரிசையில் முதல்முறையாக தரவரிசையில் இடம்பிடித்தது ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம். இந்த தரவரிசை இளங்கலை மற்றும் முதுகலை பாடங்களை வழங்கும் நிறுவனங்களை மட்டுமே மதிப்பிடுகிறது. தற்போது அப்பல் கலைக்கழகம் புதிதாக அறிமுகப்படுத்திய இளங்கலை பொறியியல் திட்டத்தினால், இப்பல்கலைக்கழக தரவரிசை மதிப்பீட்டிற்கு தகுதியுடையதாக மாறியுள்ளது. தரவரிசையில் 561570 இடத்தில் உள்ளது. முன்னதாக, இந்த தரவரிசையில் பாரதத்தை சேர்ந்த 22 கல்லூரிகள் இடம்பெற்றுள்ளன. கவுஹாத்தி, கான்பூர், கரக்பூர் மற்றும் மெட்ராஸ் ஐ.ஐ.டி இந்த தரவரிசையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன. ஐ.ஐ.டி பம்பாய் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக பாரதத்தின் சிறந்த கல்வி நிறுவனமாக தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. மேலும் உலக தரவரிசையில் ஐந்து இடங்கள் முன்னேறி 177 வது இடத்தை பிடித்துள்ளது.

QS WORLD UNIVERSITY RANKINGS®



## நைஜீரியாவுக்கு டிரம்ப் வாழ்த்து

நைஜீரிய அதிபர் முஹம்மது புஹாரி, பிரிவினைவாத இயக்கங்களுக்கு எதிராக டுவிட்டரில் ஒரு எச்சரிக்கையை விடுத்தார். இதனை “தவறான நடத்தை” என கூறி அவரது கணக்கை 12 மணி நேரம் நிறுத்தி வைத்தது டுவிட்டர். இதனால், நைஜீரியாவின் தகவல்துறை அமைச்சர் லாய் முகமது, தங்கள் நாட்டில் டுவிட்டரின் நடவடிக்கைகளை காலவரையின்றி நிறுத்திவைக்க உத்தரவிட்டார். இந்நிலையில், "நைஜீரியாவிற்கு வாழ்த்துக்கள், தங்கள் அதிபரை டுவிட்டர் தடை செய்ததால் டுவிட்டரை அவர்கள் தடை செய்தனர். பேச்சு சுதந்திரத்தை அனுமதிக்காத டுவிட்டர், முகநூலை அதிகமான நாடுகள் தடை செய்ய வேண்டும். நான் ஜனாதிபதியாக இருந்தபோதே இதைச் செய்திருந்திருக்க வேண்டும்." என்று முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் மின்னஞ்சலில் தெரிவித்துள்ளார்.

## மாலத்தீவுக்கு உதவிய பாரதம்



மாலத்தீவின் வெளியுறவு மந்திரி அப்துல்லா ஷாஹித் 76 வது ஐக்கிய நாடுகள் சபையின்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மாலத்தீவு ஐ.நாவின் உயர் பதவியில் அமர்வது இதுவே முதல் முறை. மாலத்தீவுடன் ஆப்கானிஸ்தானும் இந்த பதவிக்கு போட்டியிட்டது. மாலத்தீவும் ஆப்கானிஸ்தானும் பாரதத்துடன் சிறந்த நட்புறவைக் கொண்டுள்ளன. இருப்பினும், பாரதம் ஏற்கனவே மாலத்தீவுக்கு தனது ஆதரவை தெரிவித்திருந்த காரணத்தால், அதற்கு ஆதரவாக வாக்களித்தது. இதனால், மாலத்தீவு வெற்றி பெற்றது. மாலத்தீவு வெளியுறவு மந்திரி அப்துல்லா ஷாஹித்திற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஐ.நாவில் பாரதத்தின் நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றிய முன்னாள் தூதர் சையத் அக்பருதீன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.






ஏழை மக்களுக்கு உணவும் உதவிகளும் செய்யும் 'டோண்ட் வேஸ்ட் புட்' மல்லேஸ்வர் ராவ். மல்லேஸ்வரின் பெற்றோர் தினக்கூலிகள். குடும்பச் செலவுகளை நிர்வகிக்க, மல்லேஸ்வருக்கு எட்டு வயதிருக்கும்போது அவரும் அவருடைய சகோதரரும் உணவகம் ஒன்றில் வேலை செய்தார்கள். தினமும் 10 ரூபாய் சம்பாதித்தார்கள்.

அந்த வழியாக சென்ற சம்ஸ்கார் ஆசிரமம் வித்யாலயம் ஆசிரியர் இதைக் கவனித்தார். மல்லேஸ்வரின் வீட்டுக்கு சென்று அவரின் தாய் தந்தையுடன் பேசி ஆதரவற்ற குழந்தைகள் படிக்கும் பள்ளியில் சேர்த்தார். வேலை செய்துகொண்டே கல்லூரியில் சேர்ந்து படித்தார். ஒருமுறை ஒரு விழாவிற்காக உணவு பரிமாற சென்றிருந்தார். அங்கு வந்திருந்த அனைவரும் சாப்பிட்டு முடித்த பிறகும் அதிகளவில் உணவு மீதமிருந்ததைக் கண்டார்.

பசியின் கொடுமையை அனுபவித்த அவர், அந்த உணவை வீணாக்க மனமில்லாமல் அதனை பேக் செய்து அருகிலுள்ள ஏழைகளுக்கு விநியோகித்தார். அவரின் இந்த முயற்சிதான் என்.ஜி.ஓ தொடங்குவதற்கான ஆரம்பப்புள்ளியாக அமைந்தது. 2012ல் நண்பர் சக்ரதர் கௌத் உடன் இணைந்து ‘Don’t Waste Food’ என்கிற என்.ஜி.ஓ தொடங்கினார்.

உணவகங்கள், ஹாஸ்டல், திருமணங்கள், விழாக்கள் போன்ற இடங்களில் இருந்து உணவை சேகரித்து விநியோகிக்கிறார் மல்லேஸ்வர். தினமும் 500 முதல் 2,000 உணவுப்பொட்டலங்களை விநியோகித்து வருகிறார். மல்லேஸ்வர் மட்டுமே ஆரம்பத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் சில ஐ.டி நிறுவன ஊழியர்கள் தன்னார்வலர்களாக இணைந்தனர்.

சாலையில் ஆதரவின்றி இருப்போர், அரசு மருத்துவமனை நோயாளிகள், பொது இடங்களில் வசிப்பவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என பலருக்கும் உதவுகின்றனர். முதலில் குழுவினர் சாப்பிட்டுப் பார்த்து உறுதிசெய்த பின்னர் உடனடியாக பேக் செய்து வினியோகித்து விடுகின்றனர்.

கொரோனா காலத்தில், மல்லேஸ்வர் குழுவினர் உணவு, பழங்கள், செருப்பு, மாஸ்க், ஆக்சிஜன் சிலிண்டர் போன்றவற்றையும் ஏழை மக்களுக்கு கொடுத்து உதவியுள்ளனர். கிட்டத்தட்ட 180 உடல்கள் அடக்கம் செய்யவும் உதவியுள்ளனர். கொரோனா காலத்தில் உணவில்லாஅமல் தவித்த 4,000 தெரு நாய்களின் பசியையும் போக்கியுள்ளனர். மல்லேஸ்வரின் முயற்சிகளை பல பிரபலங்கள் பாராட்டியுள்ளனர். பிரதமர் நரேந்திர மோடி ‘மனத்தின் குரல்’ உரையில் இவரது சேவையை சுட்டிக்காட்டியுள்ளார்.